**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 75/ந/2025 நாள் 18.02.2026

அரங்க. பார்த்திபன்,
விழுப்புரம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம் மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்
2) கீதாபழனி, விழுப்புரம்.

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவென்யூ, எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அரங்க பார்த்திபன் த/பெ. திரு.S.ரங்கநாதன் என்பவரின் 20.02.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.02.2025 அன்று பெறப்பட்டு, 75/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், சரஸ்வதி நகர் அருகில், அரங்கநாதன் அவென்யூ, எண்.1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. அரங்க பார்த்திபன் த/பெ. திரு.S.ரங்கநாதன் என்பவரின் 20.02.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள 12.05.2023 கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகரம், மனை எண்.15, நடேசன் நகர், சரஸ்வதி அவென்யுவில் குடியிருக்கும் திருமதி.கீதா பழனி, அவரது கணவர் திரு.பழனி மற்றும் அவரது சகோதர சகோதரிகள் ஆகியோர் கூட்டாக சேர்ந்து கொண்டு நகராட்சி சாலையில் செடி, கொடிகள் வளர்த்து ஆக்கிரமிப்பு செய்துகொண்டு நடு ரோட்டில் காரை நிறுத்திக் கொண்டு எனது பாதை உரிமையை மறுத்து வருகிறார்கள். மேலும், நகராட்சி பொதுப்பாதை உரிமையை உபயோகிக்கும் என்னை அறுவறுக்கத்தக்க ஆபாசமான வார்த்தைகளால் வசைபாடியும் பல அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், எனது கேட் வழியாக நகராட்சி பொதுப்பாதையை உபயோகிப்பதை அச்சுறுத்தும் வகையில் மிரட்டல் விடுத்து வருகிறார்கள்.

எனவே, மேற்குறிப்பிட்ட இடத்தின் விழுப்புரம் நகராட்சியின் பொதுப்பாதையை நான் சுதந்திரமாக உபயோகிப்பதற்கு ஆவன செய்யும்படியும், மேற்குறிப்பிட்ட விழுப்புரம் நகராட்சி பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து செடி, கொடிகள் வளர்த்துள்ளதை அப்புறப்படுத்தும்படியும், நடுரோட்டில் காரை நிறுத்தி பாதை உரிமையை தடுத்து நிறுத்தி என்னை ஆபாசமாகவும்

அறுவறுக்கத்தக்க இழிவான வார்த்தைகளால் திட்டி, அச்சுறுத்தி வரும் திருமதி.கீதா பழனி, அவரது கணவர் திரு.பழனி மேலும் அவரது சகோதர சகோதரி ஆகியோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 13.03..2025 நாளிட்ட அறிவிப்பின் மூலம் விழுப்புரம் நகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது.

3) விழுப்புரம் நகராட்சி ஆணையாளரிடமிருந்து அறிக்கை எதுவும் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்படவில்லை.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 15.12.2025 அன்று நடைபெறும் விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 02.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டது.

5) மனுதாரர் 15.12.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

இவ்விசாரணையில் ஆஜராகி 20 அடி சாலையை இருபுறமும் ஆக்கிரமித்து, குப்பைகளை கொட்டுவது, கார் நிறுத்தம், கார் ஷெட் கட்டுவது போன்ற வீடியோ அடங்கிய pen drive சமர்ப்பித்துள்ளேன்.

எனது புகார் சம்மந்தமான விசாரணை 15.12.2025 அன்று முற்பகல் 11.45 மணிக்கு நடைபெறுவதை அழைப்பாணை மூலம் அறிந்து நான் சரியான நேரத்திற்கு இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகிவிட்டேன். ஆனால் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜராக வந்த நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தாமதமாக வருவதாக தெரிவிக்கப்பட்டதன்பேரில் சுமார் மாலை 03.30 மணி அளவில் நடைபெற்ற விசாரணையில் எனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளேன். மீண்டும் மாலை 04.00 மணி அளவில் எதிர்மனுதாரரான நகரமைப்பு ஆய்வாளர் ஆஜரானவுடன் மீண்டும் விசாரணை தொடங்கி நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் நகரம், நடேசன் நகர், சரஸ்வதி அவென்யூ மனை எண்.15–ல் குடியிருக்கும் திருமதி.கீதா பழனி, அவரது கணவர் திரு.பழனி மற்றும் அவரது சகோதர சகோதரிகள் கூட்டாக சேர்ந்து கொண்டு நகராட்சி சாலையில் செடி, கொடிகள் வளர்த்து கொண்டும், 20 அடி சாலையில் ஆக்கிரமிப்பு செய்து, கார் ஷெட் அமைத்துக்கொண்டு எனது வீட்டிற்கு சென்று வர முடியாத வகையில் தெற்கு வடக்காக செல்லும் சாலையின் கிழக்கு மற்றும் மேற்கு பக்கங்களில் ஆக்கிரமிப்பு செய்து எனது பொதுப்பாதை உரிமையினைத் தடுத்து வருவதோடு மட்டுமல்லாமல் சாலையில் வீட்டின் உபயோகமற்ற குப்பை பொருட்களை வீசியும், கட்டிட இடிபாடுகளுடன் மற்றும் இரும்பு கம்பிகள் போட்டும் இடையூறு செய்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்பினை அகற்றும்படியும், நடுரோட்டில் காரை நிறுத்துவதை தடுக்குமாறும், அச்சுறுத்துவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கின்றேன். மேலும் சாலையை JCB இயந்திரம் மூலம் சேதப்படுத்தியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னர் நகராட்சி ஆணையர் பணியிலிருந்த திரு. சுரேந்திரஷா என்பவர் மேற்படி சாலையினை அளவீடு செய்துவிட்டு சென்றார், ஆனால் அவரால் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மேலும் திரு.ரமேஷ் என்பவர் நகராட்சி ஆணையராக இருந்தபொழுது அவரும் வந்து மேற்படி சாலையினை அளவீடு செய்தார். ஆனால் அவர் பணியிட மாறுதலாகி சென்று விட்டார் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே பொதுப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றவும், ஆக்கிரமிப்பை தடுத்து பொதுப்பாதையை மீட்டெடுக்கவும், ஆக்கிரமிப்பாளர்களுக்கு உடந்தையாக இருக்கும் நகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு முறைமன்ற நடுவர்அவர்களை பணிந்து கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் தனது 12.12.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.364/2023/எப்1–ல் 15.12.2025 அன்று நகராட்சி ஆணையர் அவர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நேரடி பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள உள்ளதால் திரு.கே.பிரேம் ஆனந்த், நகரமைப்பு ஆய்வாளர் அவர்களை விசாரணைக்கு ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து திரு.கே.பிரேம் ஆனந்த், நகரமைப்பு ஆய்வாளர் 15.12.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகி இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எனது தாயாரின் உடல்நிலை சரியில்லாததால் அவர்களை மருத்துவமனைக்கு உடனடியாக அழைத்துச்செல்லும் பொருட்டு 13.12.2025 மற்றும் 14.12.2025 ஆகிய இரு தினங்கள் விடுப்பு எடுத்து அவர்களுக்கு சிகிச்சை அளித்து அதன் பின்னர் இன்று விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அனுமதி கடிதத்தோடு 15.12.2025 மாலை சுமார் 04.00 மணி அளவில் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜரானேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர் புகார் தெரிவித்துள்ள 20 அடி அகல சாலையில் 11 அடி ரோடு அமைக்கப்பட்டுள்ளது. அச்சாலையில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. சாலையின் அளவினை நகர சார் ஆய்வர் மூலம் அளவீடு செய்து, ஆக்கிரமிப்பு இருப்பின் அதனை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரர் புகார் தெரிவிக்கும் கார் ஷெட் அவர்களது பட்டா நிலத்தில் தங்களது சொந்த செலவில் அமைத்துள்ளனர். இதனால் பொதுமக்களுக்கோ போக்குவரத்திற்கோ பாதிப்பு இல்லை . திரு.அரங்க.பார்த்தீபன் மற்றும் திருமதி.கீதா பழனி இவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டு காவல்துறையினரால் FIR போடப்பட்டு வழக்கு நிலுவையாக உள்ளது. வழக்கு விபரம் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன்.

மேலும் மேற்படி ரோட்டின் பக்கவாட்டில் உள்ள செடி கொடிகள் மற்றும் குப்பைகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

மேலும் விழுப்புரம் நகராட்சி ஆணையரின் 12.12.2025 நாளிட்ட ஒரு பக்க அறிக்கையையும் விசாரணை அன்று இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:– அதில்;

விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூந்தோட்டம் கிராமம், நடேசன் நகர், சரஸ்வதி அவென்யு பகுதியில் திரு.அரங்க பார்த்திபன் என்பவரது வீட்டின் முன்புறம் அமைந்துள்ள நகராட்சி சாலையில் அருகில் உள்ள கீதா பழனி என்பவர் வாகனம் நிறுத்தப்பட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும் செடி கொடி அமைத்து சாலை பகுதியினை ஆக்கிரமித்துள்ளார் எனவும் புகார் மனு வரப்பட்டு வந்துள்ளது.

இதனை தொடர்ந்து புகார் மனு வரும் சமயத்தில் நேரில் சென்று காவல்துறை உதவியுடன் மேற்கண்ட சாலையின் குறுக்கே நிறுத்தப்பட்டுள்ள TN 32 AC 3135 என்ற வாகனத்தினை அப்புறப்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு பலமுறை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருளில் நகராட்சி சாலையின் குறுக்கே எவ்வித நிரந்தர கட்டுமானம் கட்டமைப்பு நடைபெறவில்லை. மேலும் இவ்விரு வீட்டாருக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடு காரணமாக இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

அரங்க. பார்த்திபன் அவர்கள் வீட்டின் பின்புறம் உள்ள கேட்டின் முன்புறம் உள்ள சாலையில் வாகனம் உள்ளது. அரங்க பார்த்திபன் மற்றும் கீதா பழனி என்பவர்கள் நகராட்சி சாலையின் முடிவில் வாசல் அமைத்துள்ளார்கள். மேலும் விசாரணையில் அரங்க பார்த்திபன் லே அவுட் வேறு, கீதா பழனி அவர்கள் லே அவுட் வேறு. இந்த ரோடு மனைப்பிரிவு சாலை முடிவு (DEAD END ROAD) ஆகவே வேறு யாரும் இந்த சாலையினை பயன்படுத்தவில்லை. இவர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும்.

விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தின் மூலம் இப்பொருள் தொடர்பாக கடந்த 01.07.2023 அன்று தங்களது அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தற்போது கார் பார்கிங் விவகாரம் இரு குடும்பத்தின் இடையே குற்றவியல் செயல்களில் ஈடுபட்டு காவல் துறையின் மூலம் F.I.R. பதிவு செய்தும், விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.1437/2024, நாள் 10.10.2024, வழக்கு தொடரப்பட்டு அடுத்த நீதிமன்ற வாய்தா 23.01.2026–ல் விசாரணைக்கு வரவுள்ளது என்ற வழக்கு விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகாரில் இருந்து விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் அவர்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கில் 2–ம் எதிர்மனுதாரராக திருமதி. கீதா பழனி என்பவர் சேர்க்கப்பட்டு அன்னாரை 03.02.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.01.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன் நகல்கள் மனுதாரருக்கும், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையருக்கும் அனுப்பப்பட்டது.

8. 2–ம் எதிர்மனுதாரரான திருமதி. கீதாபழனி என்பவரின் சார்பாக திரு.பழனி என்பவர் 03.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

நான் ஏற்கனவே காரை எனது வீட்டின் முன்புறம் நிறுத்தி வைத்திருந்தேன். எனது மனை நகராட்சி சாலையின் முடிவில் அமையப்பெற்றதால் நான் கார் நிறுத்தியிருப்பதனால் பொதுமக்களுக்கோ போக்குவரத்துக்கோ எந்தவித இடையூறும் இல்லை. இருப்பினும் புகார் மனு வரப்பெற்றதனடிப்படையில் எனது வீட்டின் முன்புறம் தனி நபருக்கு சொந்தமான மனையை கிரையம் செய்து பட்டா பெற்று அந்த மனையில் கார் செட் அமைத்துள்ளேன். கார் ஷெட் அமைத்துள்ள இடமானது கிழக்கு புறமும் மேற்கு புறமும் எனது சொந்த மனையாகும். இடைப்பட்ட சாலை முடிவில் உள்ளது. இதனால் போக்குவரத்திற்கோ பொதுமக்களுக்கோ எதுவும் இடையூறு ஏதுமில்லை.

மேலும் புகார் அளித்த நபரின் மனையானது எனது Lay out-ல் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனது மனையானது நடேசன் நகர் சரஸ்வதி அவென்யுவில் அமைந்துள்ளது. திரு.அரங்க.பார்த்திபன் மனையானது அரங்கநாதன் அவென்யு, சரஸ்வதி நகரில் அமைந்துள்ளது. மேற்படி புகார் தொடர்பாக என் மீது புகார் அளித்த திரு.அரங்க பார்த்திபன் மீது நான் எனது மனைவி, எனது தம்பி, எனது மகன் ஆகியோரை அவரது அடியாட்களை வைத்து எங்களது குடும்பத்தை சரமாரியாக தாக்கினார். இதனால் நான் இது தொடர்பாக காவல்துறையில்

6 பிரிவுகளில் புகார் செய்து அவர் மீது FIR எண்.417/2023 நாள் 10.10.2023 பதியப்பட்டு புகார் விழுப்புரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.CC 116/2023 நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் தனது 30.01.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.364/2023/எப்1,–ல் விழுப்புரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் SIR பணி தொடர்பாக தினசரி ஒவ்வொரு வாக்காளர்களை நேரில் சந்தித்து விவரம் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் தலைமையில் தினசரி SIR முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், தேர்தல் தொடர்பான பணி சிறப்பு பணி என்பதாலும் தற்போது பணிக்கான காலக்கெடு குறைவாக உள்ளதாலும் அரசிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது அவசியமானது என்பதாலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ அழைப்பாணையில் தெரிவித்துள்ள பொருள் தொடர்பாக விசாணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு.கி.பிரேம் ஆனந்த் அவர்களை அனுப்பி வைக்கிறேன் எனவும் மேற்படியாளர் விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிப்பதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து விழுப்புரம் நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு.கி.பிரேம் ஆனந்த் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் புகார் தொடர்பாக விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூந்தோட்டம் கிராமம், சரஸ்வதி அவென்யு நகராட்சி தார்சாலையில் நிலையான மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என நகராட்சி சார் ஆய்வாளர் அவர்கள் புல தணிக்கை மேற்கொள்ளப்பட்டு சான்று அளித்துள்ளார். மேலும் இந்த சாலையில் நிரந்தர கட்டமைப்பு ஆக்கிரமிப்பு ஏதுமில்லை எனவும் சாலையின் பக்கவாட்டில் திரு. பழனி என்பவர் 8 அடி அகலம் 60 அடி நீளம் உள்ள நிலத்தினை கிரையம் செய்தும் பட்டா பெற்றும் கார் செட் அமைத்து கார் பார்க்கிங் செய்து வருகிறார் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்."

10. எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகரமைப்பு ஆய்வரால் 03.02.2026 அன்றைய விசாரணையின்போது விழுப்புரம் நகராட்சி ஆணையரின் 30.01.2026 நாளிட்ட அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்:-

" விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பூந்தோட்டம் கிராமம், நடேசன் நகர், சரஸ்வதி அவென்யு பகுதியில் திரு. அரங்க. பார்த்திபன் என்பவரது வீட்டின் முன்புறம் அமைந்துள்ள நகராட்சி சாலையில் அருகில் உள்ள கீதா பழனி என்பவர் வாகனம் நிறுத்தப்பட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும், செடி கொடி அமைத்து சாலை பகுதியினை ஆக்கிரமித்துள்ளார் எனவும் புகார் வரப்பட்டு வந்துள்ளது.

இதனை தொடர்ந்து புகார் மனு வரும் சமயத்தில் நேரில் சென்று காவல்துறை உதவியுடன் மேற்கண்ட சாலையின் குறுக்கே நிறுத்தப்பட்டுள்ள TN32AC3135 என்ற வாகனத்தினை அப்புறப்படுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு பலமுறை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பொருளில் நகராட்சி சாலையின் குறுக்கே எவ்வித நிரந்தர கட்டுமானம் கட்டமைப்பு நடைபெறவில்லை. மேலும் இவ்விரு வீட்டாருக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடு காரணமாக இந்நிகழ்வு நடைபெற்று வருகிறது.

அரங்க. பார்த்திபன் அவர்கள் வீட்டின் பின்புறம் உள்ள கேட்டின் முன்புறம் உள்ள சாலையில் வாகனம் உள்ளது. அரங்க.பார்த்திபன் மற்றும் கீதா பழனி என்பவர்கள் நகராட்சி சாலையின்

முடிவில் வாசல் அமைத்துள்ளார்கள். மேலும் விசாரணையில் அரங்க.பார்த்திபன் லே அவுட் வேறு, கீதா பழனி அவர்கள் லே அவுட் வேறு. இந்த ரோடு மனைப்பிரிவு சாலை முடிவு (DEAD END ROAD) ஆகவே வேறு யாரும் இந்த சாலையினை பயன்படுத்தவில்லை. இவர்கள் மட்டுமே பயன்படுத்த இயலும். விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தின் மூலம் இப்பொருள் தொடர்பாக கடந்த 01.07.2023 அன்று தங்களது அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தற்போது கார் பார்கிங் விவகாரம் இரு குடும்பத்தின் இடையே குற்றவியல் செயல்களில் ஈடுபட்டு காவல் துறையின் மூலம் F.I.R. பதிவு செய்தும், விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண்.116/2024, நாள் 10.10.2024, வழக்கு தொடரப்பட்டு அடுத்த நீதிமன்ற வாய்தா 23.01.2026–ல் விசாரணைக்கு வரவுள்ளது என்றும் 15.12.2025–ல் நேரில் ஆஜராகி வழக்கு விவரத்தினை தெரிவிக்கப்பட்டது.

மேலும் நகர்சார் ஆய்வர் அவர்களின் மூலம் வருவாய் ஆவணங்களின்படியும் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆய்வு செய்தவற்றில் புகார் மனுதாரர் அரங்க. பார்த்திபன் அவர்களின் வீட்டின் பின்புறம் உள்ள கேட்டின் முன்பகுதி நகராட்சி தார் சாலையில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை எனவும் நகர சார் ஆய்வர் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார் எனவும், மேலும் வருவாய் ஆவணங்கள், நகர சார் ஆய்வர் குறிப்பு மற்றும் புகைப்படங்கள் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்காணும் புகார் இருவீட்டாருக்கும் உள்ள தனிப்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவ்வப்போது நிகழ்வு நடந்து வருகிறது. ஆகவே இவ்வழக்கிலிருந்து விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களை விடுவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.” என தெரிவித்துள்ளார்.

11. மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், 2–ம் எதிர்மனுதாரரான திருமதி.கீதா பழனி அவர்களின் கணவர் திரு.பழனி என்பவரின் வாக்குமூலம், விழுப்புரம் நகராட்சி ஆணையரின் சார்பில் விசாரணைக்கு ஆஜரான நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் வசிக்கும் பகுதியில் குடியிருக்கும் இரண்டாவது எதிர்மனுதாரர் தனது கணவர் மற்றும் சகோதர சகோதரிகளுடன் கூட்டாக சேர்ந்து நகராட்சிக்கு சொந்தமான சாலையில் செடி, கொடிகள் வளர்த்து வருகின்றனர் என்பதும், நடுரோட்டில் கார் நிறுத்தியும், நகராட்சி பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து மனுதாரர் உபயோகிக்காத வகையில் அச்சுறுத்தும் வகையில் மிரட்டி வருகின்றனர் என்பதும், மேற்படி நகராட்சிக்கு சொந்தமான பொதுப்பாதையை உபயோகிப்பதற்காக இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

நகராட்சி சார் ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட புல தணிக்கையில், மனுதாரரின் புகாருக்குள்ளான பகுதியில் உள்ள தார்சாலையில் நிலையான மற்றும் தற்காலிக ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது என்பதும், மேற்படி சாலையில் நிரந்தர கட்டமைப்பு ஏதும் அமைக்கப்படவில்லை என்பதும், இரண்டாவது எதிர்மனுதாரரின் கணவரால் சாலையின் பக்கவாட்டில் 8 அடி அகலம் 60 அடி நீளம் கொண்ட நிலம் கிரையம் செய்யப்பட்டு கார் பார்க்கிங் ஷெட் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், கார் பார்க்கிங் விவகாரத்தால் இருதரப்பினரிடையே தனிப்பட்ட கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவ்வப்போது மோதல் உருவாகிறது என்பதும், இதன் காரணமாக காவல் துறை முதல் தகவல் அறிக்கை (FIR) தாக்கல் செய்து, விழுப்புரம் மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.CC 116/2024 நிலுவையில் உள்ளது என்பதும் விழுப்புரம்

நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலங்களிலிருந்து அறிய முடிகிறது.

இரண்டாவது எதிர்மனுதாரரின் மனை நகராட்சி சாலையின் முடிவில் அமையப்பெற்றதால் காரை தனது வீட்டின் முன்புறம் நிறுத்தி வைத்துள்ளார் என்பதும், இதனால் பொதுமக்களுக்கோ போக்குவரத்துக்கோ எந்தவித இடையூறும் ஏற்படுவதில்லை என்பதும், இதுகுறித்து புகார் வரப்பெற்றதால், வீட்டின் முன்புறம் உள்ள மனை கிரையம் செய்து கார் ஷெட் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், தனது மனை நடேசன் நகர் சரஸ்வதி அவென்யுவிலும் மனுதாரரின் மனை சரஸ்வதி நகர் அரங்கநாதன் அவென்யூவிலும் அமைந்துள்ளது என்பதும், புகார் தொடர்பாக ஏற்பட்ட கைகலப்பால் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து 6 பிரிவுகளில் மனுதாரர் மீது காவல்துறை FIR எண்.417/2023 நாள் 10.10.2023 பதியப்பட்டு விழுப்புரம் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் (வழக்கு எண்.CC 116/2024) வழக்கு நடைபெற்று வருகிறது என்பதும் இரண்டாவது மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது.

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to, --

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c ) xxx xxx

எனவே, இப்பொருள் தொடர்பான வழக்கு எண். CC 116/2024 நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் மேற்படி விதிகளின்படி, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க இயலாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 18–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.அரங்க பார்த்தீபன்,
எண்.1, அரங்கநாதன் அவென்யு,
சரஸ்வதி நகர் அருகில்,
விழுப்புரம் – 605 602.விழுப்புரம் மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம். விழுப்புரம் மாவட்டம்.

3. திருமதி. கீதாபழனி,
எண்.15, நடேசன் நகர், சரஸ்வதி அவென்யூ,
விழுப்புரம் – 605 602,
விழுப்புரம் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

19/2/26
செயலாளர்.